பக்கங்கள் 14+2

# மாலை முரசு


முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை 08.11.2024 | அதிர்வு 99

## பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் விசேட விடுமுறை

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்படவுள்ளது. 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### மதுபானசாலை அனுமதி தொடர்பில்

# போலித் தகவலைப் பரப்பியவருக்கு எதிராகச் சிறீதரன் சட்ட நடவடிக்கை

### கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மதுபானசாலை அனுமதிக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கியுள்ளார் என்று போலிக் கடிதம் ஒன்றுடன் முகநூலில் விசமப் பிரசாரம் செய்த ஒருவருக்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸில் முறைப்பாடு 02 ▶

## மட்டக்களப்பில் மின்னல் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு



மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல்தாக்கி உயிரிழந்துள்ளார். 03 ▶

## கந்தப்பளையில் லொறி விபத்து ஒருவர் மரணம்; அறுவர் காயம்



நுவரெலியா, இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தபளை – கொங்கொடியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர். 02 ▶





# முருகனைச் சந்தித்த சிவாஜிலிங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி பல ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட முருகன், நளினி ஆகியோரை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று வியாழக்கிழமை நேரில் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் இத்தாவில் பகுதியில் உள்ள முருகனின் இல்லத்துக்கு நேரில் சென்று சந்தித்துள்ளார்.

இதன்போது முருகனின் மனைவி நளினியும் உடன் இருந்துள்ளார்.

தமிழ்நாட்டின் வேலூர் சிறையில் இருந்த காலத்தில் பழ நெடுமாறனுடன் சென்று தான் சிறையில் வைத்து இவர்களைச் சந்தித்திருந்த நிலையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்ட போது மருத்துவ சிகிச்சைக்காகத் தமிழகத்தில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டிருந்தது என்றும், தற்போது விடுதலையின் பின்னர் அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்ததாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முருகன், நளினி தம்பதியர் இலண்டனில் உள்ள தங்களது மகளிடம் செல்வதற்கு விண்ணப்பித்திருந்த நிலையில் அது நிராகரிக்கப்பட்டதை அடுத்து அவர்களின் மகள் மீண்டும் விண்ணபித்துள்ளார் என்றும், அதன் முடிவுக்காகக் காத்திருக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர் என்று சிவாஜிலிங்கம் மேலும் கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பாடசாலைகளுக்கு...

தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு அமைய, இரண்டு நாட்களும் விசேட விடுமுறை வழங்கப்படுகின்றது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 15ஆம் திகதி போயா விடுமுறை என்பதால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### கந்தப்பளையில்...

இந்த விபத்து இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கந்தப்பளை பிரதான நகரில் இருந்து கொங்கோடியா பகுதிக்கு மரக்கறி சேகரித்து ஏற்றச் சென்ற டிப்பர் லொறியொன்று பாதையை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று இராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் 43 வயதான நபரே உயிரிழந்துள்ளர்.

விபத்தில் காயமடைந்த 6 பேரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் இராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### போலித் தகவலை...

செய்ததன் பின்னர் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை சிவஞானம் சிறீதரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஜனநாயக முறைப்படி உட்கட்சித் தேர்தலின் அடிப்படையில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட என்னை, நீதிமன்ற வழக்கினால் இயங்க விடாது தடுத்தவர்களின் மற்றொரு முயற்சியாக, எனது கடிதத் தலைப்பையும், பதவி முத்திரையையும் முறைகேடாகப் பயன்படுத்தி தொழிநுட்ப உதவியோடு போலியான கடிதத்தைத் தயாரித்து முகநூலில் விசமப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தகைய வதந்திகளைப் பரப்பும் நபர் ஒருவர் மீது இன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். தொடர்ச்சியான முறைமைகளுக்குட்பட்டு அந்த நபர் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



வெளியிடப்பட்ட கடிதம் போலியானது என்பதை எண்பிக்கப் போதுமான ஆதாரங்கள் அந்தக் கடிதத்திலேயே உள்ளன.

அறிவிலித்தனமாகச் செயற்பட்டு வரும் இவர்களை எமது மக்கள் எளிதில் இனங்கண்டு கொள்வார்கள்.

என்னை விசுவாசிக்கும் எனது மக்களுக்கு நான் மீளவும் ஒன்றை வலியுறுத்திக் கூறுகின்றேன். இதுவரை காலமும் நான் மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தைப் பெறவோ, அத்தகைய அனுமதி ஒன்றுக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கவோ இல்லை.

அவ்வாறு நான் வழங்கியிருப்பதாக யாராவது கருதினால் ஜனாதிபதி செயலகத்திலோ, மதுவரித் திணைக்களத்திலோ உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை வெளிப்படுத்துங்கள். அதைவிடுத்து பிற்போக்குத்தனமான அற்ப அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு உங்களை நீங்களே தரம் தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.” – என்றார்.

# தேர்தலில் போட்டியிடும் 11 வேட்பாளர்கள் கைது!

## 353 ஆதரவாளர்களும் சிக்கினர்

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் 11 வேட்பாளர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தமை, சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளைக் காட்சிப்படுத்தியமை, சந்தேக நபர்களை விடுவிப்பதற்காகப் பொலிஸ் நிலையங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியமை ஆகிய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் வேட்பாளர்களின் 353 ஆதரவாளர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினர்.



## ‘பெண்களின் பங்களிப்பை அரசியலில் மேம்படுத்துவோம்’

# வவுனியாவில் விழிப்புணர்வு வீதி நாடகம்

(கி.வசந்தன்)

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் “பெண்களின் பங்களிப்பை அரசியலில் மேம்படுத்துவோம்“ என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இந்த விழிப்புணர்வு நாடகம் முன்னெடுக்கப்பட்டது.

பெண்களை அரசியலில் ஊக்குவிக்கும் முகமாக இந்த விழிப்புணர்வு நாடகம் முன்னெடுக்கப்பட்டது.



**மட்டக்களப்பில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் துயரச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர், வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கதிர்காமநாதன் ரமேஷ்குமார் (வயது 48) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மற்றுமொரு நபருடன் இணைந்து உப்போடை பிரதேசத்தில் உள்ள வயலுக்குச் சென்று மீண்டும் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றைய நபருக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என்று ஏறாவூர் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.








காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பதுளை, கிராந்துருகோட்டை – செனவிகம பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கிராந்துருகோட்டை பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்று இரவு 9 மணியளவில் தனது காணிக்கு வந்த காட்டு யானையை விரட்ட முற்பட்டபோது யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலத்தை நீதிவான் பார்வையிட்டதன் பின்னர் சடலம், பிரேத பரிசோதனைக்காக மஹியங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# தேர்தலில் ஊழல், மோசடியில் ஈடுபட்டவர்கள் அரசியலில் இருந்து ஓரங்கட்டப்படுவார்கள்!

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியாகிய நாம் கடந்த 18 வருடங்களாக நேர்மை, மக்கள் நலன், வாழல் மோசடிகள் அற்ற நல்லாட்சி மாற்றம் என தொடர்ச்சியாக குரல் கொடுத்தும், பாடுபட்டும் வருகின்றோம்.

இதன் தொடர்ச்சியாகவே இம் முறையும் நாம் தேசிய அளவில் 4 மாவட்டங்களில் “இரட்டைக் கொடி” சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றோம். அந்த வகையில் அம்பாறை மாவட்டத்திலும் எமது கட்சி தனியாக போட்டியிடுகின்றது. திகாமடுல்ல மாவட்டம் நாடாளுமன்றத் தேர்தலில் இரட்டைக் கொடி சின்னத்துக்கு வாக்களித்து எமது வாக்குகளை பெறுமதி மிக்கதாக மாற்ற அனைவரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு, அம்பாறை ஊடக மையத்தில் சமகால அரசியல் தொடர்பாக நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பாக போட்டியிடும் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்களான எம்.எச். ரிஸ்வானுல் ஹக் மற்றும் வேட்பாளர் ஏ.எச்.எம்.பரீட் ஆகியோர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

திகாமடுல்ல மாவட்டம் நாடாளுமன்றத் தேர்தல் -2024 இல் இரட்டைக் கொடி சின்னத்துக்கு வாக்களித்து எமது வாக்குகளை பெறுமதி மிக்கதாக மாற்ற அனைவரும் முன்வர வேண்டும். நல்லாட்சிக்கான தேசிய முன்னணியாகிய நாம் கடந்த 18 வருடங்களாக நேர்மை, மக்கள் நலன், வாழல் மோசடிகள் அற்ற நல்லாட்சி மாற்றம் என தொடர்ச்சியாக குரல்கொடுத்தும், பாடுபட்டும் வருகின்றோம். இதன் தொடர்ச்சியாகவே இம்முறையும் நாம் தேசிய அளவில் 4 மாவட்டங்களிலே “இரட்டைக் கொடி” சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றோம். அந்த வகையில் அம்பாறை மாவட்டத்திலும் எமது கட்சி தனியாக போட்டியிடுகின்றது.

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலானது, கடந்த கால தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தலாகும். இதுவரை காலமும் எமது நாட்டிலே நிலவி வந்த ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டு அந்த ஆட்சியாளர்களையே விரட்டி அடித்த மக்கள்



புரட்சி 2022 இல் இடம்பெற்றது. மக்கள் வேண்டிநிற்கும் ஆட்சி முறை மாற்றத்துக்கான இரண்டாவது முக்கியமான தேர்தலாக எதிர்வரும் பொதுத் தேர்தல் அமைந்துள்ளது. மாற்றத்துக்கான முதலாவது தேர்தலான, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, 42 வீதமான மக்கள் வாக்களித்த நிலையில் அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

அத்துடன் மக்களின் எதிர்பார்ப்பை அவர் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார். இருந்த போதிலும் கடந்த ஒரு மாத கால அனுபவம் இந்த புதிய ஆட்சியின் சில தடுமாற்றங்களையும் தாமதங்களையும் நமக்கு உணர்த்துகிறது. எனவே எதிர்வரும் தேர்தலை மக்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த தேர்தலின் போது நாம் ஒரே ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு மாத்திரமே எங்களிடம் இருந்தது. எனினும் தற்பொழுது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு எம்முடன் உள்ளது.

இம்முறை நாம் தேர்வு செய்கின்ற உறுப்பினர்கள், ஆட்சியாளர்கள் மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடியவர்களாகவும், அதே நேரம் மக்களின் எதிர்பார்ப்புகள் புறக்கணிக்கப்படுகின்ற போது அதனை தைரியமாக சுட்டிக்காட்டுகின்ற, அதற்காக குரல் கொடுக்கின்ற ஒரு சுயாதீனமான, தனித்துவமான பிரதிநிதியாகவும் இருத்தல் வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் இருந்தும் இந்த மாற்றத்துக்கு உரிய சுயாதீனமான பிரதிநிதிகளை நாம் தேர்வு செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதனை நமது மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

துரதிஷ்டவசமாக, கடந்த காலங்களில் நாம் தெரிவு செய்து அனுப்பிய நமது பிரதிநிதிகள் மக்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை. மக்களுக்கும் தேசத்துக்கும் விரோதமான சட்டங்களுக்கு ஒத்துழைக்கின்றவர்களாக பல தடவைகளில் இருந்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் மக்களின் வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்துக்கு சென்ற போதிலும் கூட மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளும் நிரந்தர தீர்வுகள் இன்றிய பிரச்சினைகளாகவே இன்னும் இருக்கின்றன.

தேசத்தின் நலனில் அக்கறை கொண்டு அவர்களால் இன்னுமே சுயமாக எழுந்து நிற்க முடியவில்லை. ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்காக அவர்களால் குரல் கொடுக்கவும் முடியவில்லை.

எனவேதான் இத்தேர்தலில் ஊழல், மோசடிகளில் மூழ்கியிருந்தவர்கள் அரசியலில் இருந்தே ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். இன்னும் இருப்பவர்களும் இந்த பொதுத் தேர்தலுடன் ஓரங்கட்டப்படுவார்கள்.

இந்நிலையில், இந்த பொதுத் தேர்தலில் நாம் நமக்கான பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பது எப்படி? என்பது மிக முக்கியமான ஒன்றாகும். ஊழல், மோசடி அற்றவர்கள், புத்திஜீவிகள், நாட்டுப் பற்றுள்ளவர்கள், சமூக அக்கறையுள்ளவர்கள் என நாம் தேர்வு செய்யும் உறுப்பினர்கள் அனைத்துத் துறையிலும் பொருத்தமானவர்களாக இருக்க வேண்டும்.

எனவேதான் இந்தத் தேர்தலில் வாக்காளர்கள் தமது வாக்குகளை மிகப் பிரயோசனமான ஒன்றாக மாற்றிக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுத்தி தந்துள்ளது.

இந்தத் தேர்தல் என்பது ஆளும் கட்சிக்கான அலையொன்று இருப்பதாக காட்டப்பட்டாலும், சமூகமாக நாம் நமக்கானவர்களை பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து கொள்வதில் மிக உறுதியாக இருக்க வேண்டும்.

இதற்கு உரிய தகுதியும் உரிமையும் கொண்ட நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியின் இரட்டை கொடி சின்னத்துக்கு வாக்குகளை வழங்கி அவற்றை பெறுமதி மிக்கதாக மாற்றுவோம்.- என்றனர்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

**08, 09, 10/11/2024**

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு

900g Mari Biscuit

**இலவசம்**




*Open until 10:00 PM.*

1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7

Contact : 416 283 9998

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒன்லைன் நிதி மோசடிகள்

‘வட்ஸ்அப்’ போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக ஒன்லைன் நிதி மோசடிகளில் சிக்கித் தவிக்கும் பொதுமக்கள் பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு முறையிடுமாறு கோரப்பட்டுள்ளது.

*dir.ccid@police.gov.lk* என்ற முகவரி ஊடாக பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மின்னஞ்சல்களை அனுப்புவதன் மூலம் முறைப்பாடுகளை பதிவு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

முகப் புத்தகம் (ஃபேஸ்புக்) மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடக கணக்குகளுக்குள் ஊடுருவுவதன் மூலம் பொது மக்களின் நிதி மோசடி செய்யப்படுவதாக பல முறைப்பாடுகள் வந்தமையை அடுத்தே இப்படிப் பாதிக்கப்பட்டோரை முறைப்பாடு செய்யக் கோரும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் வாயிலாக பிரபல நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும் என இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு ஏற்கனவே பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வங்கிகள், வணிக நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி நன்கொடைகள், பணப் பரிசுகள், வெற்றிகள், வேலைவாய்ப்பு போன்றவற்றைப் பெறுவதற்கு உடனடியாக பதிவுசெய்துக் கொள்ளுமாறு சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி தகவல் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என பல தடவைகள் திரும்பத் திரும்ப எச்சரிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இணைய மோசடியில் ஈடுபடுபவர்கள் வழமையாக போலி இணையத் தளங்கள், சமூக ஊடகங்கள், குறுஞ்செய்தி மற்றும் வட்ஸ்அப் செயலி மூலம் பகிரப்படும் போலி தகவல்கள் வாயிலாகப் பிறரைத் தொடர்பு கொள்ள முயற்சிப்பார்கள்.

போலி செய்தியின் இணைப்புகளை அணுகுபவர்களே மோசடிக்காரர்களின் வலையில் வீழ்கின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. இத்தகைய இணைப்புகளுக்கு தமது சமூக ஊடகங்களை தொடர்பு வைக்க இடமளிக்கும் பொதுமக்களின் தொலைபேசிகள், கணினிகள் போன்றவற்றிற்குள் அவர்கள் ஊடுருவி அவற்றில் உள்ள தகவல்களைத் திருடி, முறைகேடான மற்றும் பண மோசடியில் ஈடுபடுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இவ்வாறான மோசடிகள் அதிகரித்து வருகின்றன. இவற்றால் பாதிப்புக்குள்ளாகுவோரின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது எனப் பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது.

ஆகவே, சந்தேகத்துக்குரிய இணைப்புகளைத் திறக்கவோ அல்லது எஸ்.எம்.எஸ். அல்லது வட்ஸ்அப் செய்திகள் மூலம் அனுப்பப்படும் நிதி தொடர்பான கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கவோ வேண்டாம் என்றும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொது மக்களின் அறியாமையும், அலட்சியமும் , பொறுப்பற்ற போக்கும் இவ்வாறன குற்றங்கள் சமூகத்தில் அதிகரிப்பதற்கு சாதகமாக அமைந்துள்ளன என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து

# பெண்ணிடம் ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்ற சிறை அலுவலர் மறியலில்!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் வவுனியா சிறைச்சாலை அலுவலர் ஒருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார். இதன் போது குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (05) வவுனியா சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதிவான் நீதிமன்றில் கடமைக்காக வந்துள்ளார்.

இந்தச் சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதிமன்ற தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை பார்வையிடுவதற்காக சென்ற பெண் ஒருவரிடம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபரை பார்வையிடுவதற்காக 1000 ரூபா பணத்தைப் பலவந்தமாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் குறித்த சிறைச்சாலை அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணால் அடையாளம் காண்பிக்கப்பட்ட நிலையில் அந்தச் சிறைச்சாலை அலுவலர் நீதிவான் நீதிமன்றில் வைத்து கைது செய்து விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் சிறைச்சாலை அலுவலரை இன்று 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.






# நியூசிலாந்தில் உலக பிறிமியர் தொடரில் நடுவராக மூதூர் சிஹான் சுஹூட் தெரிவு!

(ஹஸ்பர்)

நியூசிலாந்தின் அவுக்லாந்த் கிரிக்கெட் சபையின் ஆடவர் மற்றும் மகளிருக்கான 2025 இற்கான உலக பிறிமியர் தொடர் இடம்பெறவுள்ளது.

இந்தத் தொடரில் கிரிக்கெட் நடுவராக இலங்கை கிரிக்கெட் சபையின் சரா பெனல் நடுவரும், இங்கிலாந்து கிரிக்கெட்டின் தரம் இரண்டின் நடுவரும் மற்றும் இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் பிராந்திய முதல்தர நடுவருமான திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த மூதூர் சிஹான் சுஹூட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தொடரானது 2024 டிசெம்பர் முதல் 2025 ஏப்ரல் வரையான காலப் பகுதியில் நியூசிலாந்தின் அவுக்லாந்த் மற்றும் வெலிங்டன் நகரங்களில் நடைபெறவுள்ளது.

குறித்த தொடருக்கான இரண்டாம் மற்றும் நொக் அவுட் சுற்றுக்களுக்காவே நடுவர் சிஹான் சுஹூட் அவுக்லாந்த் கிரிக்கெட் சபையால் அழைக்கப்பட்டுள்ளார்.

குறித்த தொடரில் பல அனுபவம் வாய்ந்த சர்வதேச நடுவர்கள் பங்குபற்றுவதும் சிறப்பம்சமாகும். இலங்கை கிரிக்கெட் சபையிலிருந்து நியூசிலாந்தின் பிறீமியர் தொடரில் பங்குபற்றும் முதல் இலங்கை நடுவர் இவராவார்.

இவர் 2022 இல் இங்கிலாந்தின் மன்செஸ்டர் கிரிக்கெட்டின் முதல்தர போட்டிகளுக்கு இலங்கைக் கிரிக்கெட் சபையில் இருந்து தெரிவான முதலாவது நடுவராவார்.

இவர் தற்போது இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் பிராந்திய முதல் தரம் மற்றும் பிறீமியர் தொடரின் நடுவராக கடமையாற்றி வருகிறார்.

மூதூர் மத்திய கல்லூரி, இ.கி.ச. திருகோணமலை இந்துக் கல்லூரி மற்றும் மாவனல்ல சாஹிரா கல்லூரியின் பழைய மாணவரான சிஹான் சுஹூட் திருமலை கிரிக்கெட் சங்கம் மற்றும் நடுவர்கள் சங்கத்தின் சிரேஷ்ட நடுவருமாவார்.

2016 தொடக்கம் தேசிய ரீதியாக இலங்கையில் பல மாவட்டங்களிலும் சிறப்பாக நடுவராக பணியாற்றிய சிஹான் சுஹூட் 2022 இல் இருந்து இற்றைவரை கிரிக்கெட்டின் முதல்தர நாடுகளில் பிராந்திய மற்றும் முதல்தர போட்டிகளில் நடுவராக பணியாற்றிவருவதும் குறிப்பிடத்தக்கது.

# எதிர்ப்பு அரசியல் நடத்துவதன் மூலம் மக்களுக்கான தீர்வை பெற முடியாது!

## ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி வேட்பாளர்

(பழுவூரான்)

புதிய ஜனாதிபதியின் ஊழல் ஒழிப்பு விடயங்களுக்கு எமது கட்சி தொடர்ச்சியான ஆதரவை வழங்க உள்ளது. கடந்த காலங்களில் தமது அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை புதிய அரசு நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்துள்ளது என ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியின் மாவட்ட அமைப்பாளரும் முதன்மை வேட்பாளருமான தம்பாப்பிள்ளை சிவானந்தராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) இடம்பெற்ற ஊடகச் சந்தாப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீடமைப்புத் திட்டங்கள் கிடைக்கப்




பெற்ற போதிலும் தேர்தல்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் காரணத்தால் அவற்றை விரைவாகச் செய்ய முடியவில்லை. இருந்த போதிலும் புதிய அரசுடன் நமது கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பேச்சு நடத்தி 38 கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த காலங்களில் தமது அமைச்சால் ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை புதிய ஜனாதிபதியிடம் நிறைவு செய்து தரும்படியும் வேண்டியிருந்தார். அரசு அதனை நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்துள்ளது.

முன்னாள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையகப்படுத்திய காணிகளைப் பெற்று மாவட்டத்தில் காணி, வீடு அற்றவர்களுக்கு வழங்க திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புதிய அரசுடன் இணக்க அரசியல் நடத்துவதன் மூலம் தான் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை முன்னெடுக்க முடியும்.- என்றார்.





# மின்சார சேவையை வழங்குநர்கள் பொறிமுறை தயாரிக்க ஆலோசனை

(ஹஸ்பர்)

அரச காணி உட்பட ஏதேனும் காணிக்குள் குடியிருக்கும் நுகர்வோருக்கு மின்சார சேவையை வழங்கும் பொருட்டு மின்சார சேவையை வழங்குநர் பொறிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கான மக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகளை கேட்டல் நிகழ்வு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவி செயலாளர் ஏ.ஆதவன், நுகர்வோர் விவகார பிரிவு மக்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பிரதிப் பணிப்பாளர் ரொஷான் வீரசூரிய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் காஞ்சன ஸ்ரீ வர்த்தன, பங்குதாரர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்டக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கு, அவர்களது கலையின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவையைக் கௌரவப்படுத்தும் முகமாக அரசால் அங்கீகாரமளிக்கப்பட்டு வழங்கப்படும் “தேசிய கலைஞர் அடையாள அட்டை” வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்றது.



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீக்காவின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றின்ஸானின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் என்.எப். அய்மா மற்றும் ஏனைய பிரதேச செயலகங்களில் பணியாற்றும் கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களில் இருந்து இந்த முறை 26 பேர் கலைஞர், அடையாள அட்டைக்காக தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு தேசிய ரீதியில் “கலைஞர் அடையாள அட்டை” வழங்கி வைக்கப்பட்டது.

அந்த வகையில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இருந்து ஏ. இஸ்ஸதீன், ஐ.எல்.எம். முபாரக், எம்.எம். மன்சூர், ஏ.எல். மன்சூர், எம். ஜெமில், ஏ.பி. காலிதீன், ஏ.எம்.ஜப்பார், ஏ. ஆர். எம் .நௌபீல், யு.கே.எம். றிம்ஸான், எம்.ஏ.சி.எஸ். ஜெஸீனா, எம்.ஏ. பைஸர், ஏ.எம்.சுலைமாலெப்பை, எம்.ஐ.எம். அபூபக்கர் ஆகியோரும்–

திருக்கோவில் பிரதேச செயலகத்தல் இருந்து பி. பாலகிருஷ்ணன், எஸ். கார்த்திகேசு, எஸ். ஜெயனந், எம். கிருஷ்ணப்பிள்ளை ஆகியோரும் –

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இருந்து எஸ்.எச். மும்தாஜ் பேகம், எப். முஹம்மத் மூர்த்தலா, எம்.ஐ. ஜெஸ்மா, இஸட்.ஏ. ரஹ்மான், வை.ஏ. அப்துல் லத்தீப் ஆகியோரும் –

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இருந்து எஸ். எம். முஹம்மத் ஜவாத், ஏ. சுதர்சன், ஏ.பி.பெனாசிர் ஜஹான் ஆகியோரும் –

இறக்காமம் பிரதேச செயலகத்தில் இருந்து எம்.சமுக்கூனுக்கும் இம்முறை கலைஞர் அடையாள அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன.

சாய்ந்தமருது மருதூர் கலைமன்றத்தின் பொல்லடி குழுவிலிருந்து 07 பேர் தேசிய கலைஞர் அடையாள அட்டைக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





### தமது மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பாக

# நானாட்டான் கால்நடை வளர்ப்போர் பிரதிநிதிகள் பொலிஸில் முறைப்பாடு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல் தரவைக்கு ஒதுக்கப்பட்ட கட்டுக்கரை குளம் புல்லறுத்தான் கண்டல் பகுதியில் சிலர் அடாத்தாக விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்போர் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்போரின் நீண்ட காலப் பிரச்சினையாக மேய்ச்சல் தரை காணப்படுகின்றது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் இருந்து தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்த போதும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த பகுதியில் அடாத்தாக விவசாயம் செய்து வருகின்றமை குறித்து முருங்கன் பொலிஸ் நிலையத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்ய சென்ற நிலையில் முருங்கன் பொலிஸார் தமது முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர் என்று பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்போர் தமது பிரச்சினையை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) மாலை நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர் சங்க பிரதிநிதிகளுக்கும், மெசிடோ நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

பின்னர் மெசிடோ நிறுவனத்தின் உதவியுடன் குறித்த பிரச்சினை மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) மாலை நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர் சங்க பிரதிநிதிகள், மெசிடோ நிறுவன பிரதி நிதிகளும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்குச் சென்று கலந்துரையாடினர்.

குறிப்பாக மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சிலர் அடாத்தாக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறித்தும், முருங்கன் பொலிஸார் தமது முறைப்பாட்டை ஏற்க மறுத்தமை குறித்தும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 9 ஆம் திகதி குறித்த பிரச்சினை தொடர்பில் இரு தரப்பினரையும் அழைத்து தீர்வை பெற்றுத் தருவார் என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

கட்டுக்கரை புல்லறுத்தான் குளம் பகுதியில் 352 ஏக்கர் நிலப்பரப்பு மேய்ச்சல் தரவையாக வழங்க முடிவு செய்யப்பட்ட நிலையில் தற்போதுவரை இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.





# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை ஒரு வருடத்துக்குள் தரம் உயர்த்துவேன்!

## இல்லையேல் பதவியைத் துறப்பேன் என்கிறார் ஜெயசிறில்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நான் நாடாளுமன்ற உறுப்பினராகி ஒரு வருடத்துக்குள் தரம் உயர்த்துவேன். இல்லாது போனால் நிச்சயமாகப் பதவி துறப்பேன்.

இவ்வாறு சேனைக்குடியிருப்பில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார்.

குறித்த கூட்டம் நேற்று மாலை சேனைக்குடியிருப்பு ஆற்றங்கரை முருகன் ஆலயத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக கடந்த தேர்தலில் சவாரியில் வலம் வந்த கருணா அதை மஹிந்த நிகழ்ச்சி நிரலில் நிறைவேற்றிக் காட்டினார் .

இம்முறை ஒற்றுமை என்று வந்த எம்மவர் அந்த பாணியில் ஈடுபடுகின்றார்கள். அது சரி வராது.

கடந்த 35 வருட காலமாக தேசிய பிரச்சனையை பேசி மக்களிடம் வாக்கு பெற்றவர்கள் மக்களின் பிரச்சினை தீர்த்து வைக்காததே அதற்குக் காரணம்.

6 கிராம சேவையாளர் பிரிவு உள்ளடக்கிய இறக்காமத்துக்கு ஒரு பிரதேச செயலகமா என்றால் 29 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட 39 ஆயிரம் தமிழ் மக்கள் வாழும் பெருநில பரப்புக்கு இரண்டு பிரதேச செயலர் பிரிவுகள் இரண்டு பிரதேச சபைகள் நிச்சயம் வேண்டும் .

ஆனால் ஒரு பிரதேச செயலகத்தைக் கூட முறையாகப் பெற முடியாத சூழல் இருந்து வந்திருக்கின்றது. ஒரு கணக்காளரைக் கூட நியமிக்க முடியாத நிலைமை இருந்திருக்கின்றது.

ஆனால் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நான் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருட காலத்துக்குள் அந்த பணி நிச்சயம் பூர்த்தியாகும். இல்லாவிட்டால் எனது பதவியை துறக்கவும் தயங்க மாட்டேன்.

இங்கு அரச பயங்கரவாதம் அம்பாறை மாவட்ட தமிழருக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு இருக்கின்றது. அதனை அடித்து உடைத்து அதனை முன்னேடுக்க வேண்டுமாக இருந்தால் நிச்சயம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் தான் முடியும். இதுவரை சரியான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் செய்யாததுதான் இந்த நிலைக்குக் காரணம் என்று மக்கள் கூறுகிறார்கள்.

எனவே சொந்தம் பந்தம் என்று சங்குக்கு வாக்களித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம்.சங்கு ஒருபோதும் வரப் போவதில்லை. எனவே நிச்சயமாக தெரிவாகும் வீட்டுக்கு வாக்களித்தால் மட்டுமே எமது வாழ்க்கை வளமாகும்.

588 கோடி ஊழலுடன் 5 ஆயிரம் ரூபா நோட்டுகளுடன் வலம் வருகிறார் ஒருவர். கடந்த காலங்களிலே கொரோனா மற்றும் வெள்ள நேரங்களில் இவர்கள் எங்கு சென்றார்கள்? எங்கே இந்த 5 ஆயிரம் ரூபா நோட்டுகள் சென்றன. கப்பல் போய் படகு வந்திருக்கிறது .சில வீணாய்ப் போனவர்கள் வீணை வாசிக்க வந்திருக்கிறார்கள். அவர்கள் கூலிவேலை செய்தவர்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை உலகறியும். இம்முறை எதுவுமே மக்கள் மத்தியில் எடுபடாது .

தமிழருக்கு தலைவன் காட்டிய சின்னம் வீட்டுச் சின்னம். சிலர் வீட்டுக்குள் பிரச்சினை என்கிறார்கள். பாரிய கட்சியில் பிரச்சனை வருவது வழமை. பிரச்சினையைச் சரி செய்வது எமது திறமை. எனவே வீட்டுக்கு வாக்களித்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள். – என்றார்.




# இளையோருக்கு செய்ய வேண்டியதைச் செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் நீங்கள் தாருங்கள்!

## கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர், அபு அலா)

திகாமடுல்ல மாவட்டத்தில் கல்முனைத் தொகுதியின் மரச் சின்னத்தில் 3 ஆம் இலக்கத்தில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிபபை ஆதரித்து நேற்று முன்தினம் புதன்கிழமை இளைஞர்களுடனான ஒன்று கூடல் நிகழ்வு மாளிகைக்காடு பாவா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

நாரே தக்பீர் அல்லாஹு அக்பர் என்ற கோஷத்துடன் மாளிகைக்காடு சந்தியில் இருந்து இளைஞர்கள் புடைசூழ முன்னாள் கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், ஊர்வலமாக பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் பிர்தௌஸ், ஜி.எம்.எம்.எஸ். வித்தியாலய முன்னாள் அதிபர் சியாத் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையான இளைஞர்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், திகாமடுல்ல மாவட்டத்தின் கல்முனைப் தொகுதியில் 3 ஆம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,







இளைஞர்களின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உருவாக்கம் ஏன் இடம்பெற்றது, இதன் மூலம் எமது சமூகம் அடைந்த நன்மைகள் என்ன? போன்ற ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டால், இந்த இளைஞர்களின் கல்வி, தொழில்வாய்ப்பு போன்ற விடயங்களில் பல திட்டங்களை நடை முறைப்படுத்த எண்ணியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

ஒரு சந்தர்ப்பத்தை தாருங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ன செய்ய முடியும் என்பதைச் செய்து காட்டுகின்றேன் என்றும் கருத்துரை வழங்கினார்.

இராப்போசனத்துடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வெற்றி வேட்பாளர் சிராஸ் மீராசாஹிபின் மரச்சின்னம் 3 ஆம் இலக்கம் பொறிக்கப்பட்ட ரி சேட் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அங்கு வருகை தந்த அத்தனை இளைஞர்களுக்கும் ரி சேட் வழங்கப்பட்டது.

# பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உற்பத்திப் பொருள் விற்பனை, கண்காட்சி

(பாறுக் ஷிஹான்)

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையல் பயிற்சி யுவதிகளின் உற்பத்திப் பொருள்கள் விற்பனையும் கண்காட்சியும் நடைபெற்றன.

டயகோனியா அனுசரணையுடன் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி நடத்திவரும் இந்தத் தையல் பயிற்சியானது ஆசிரியை திருமதி ஜெமினா பர்வின் நெறிப்படுத்தலில் மருதமுனை பகுதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சந்தைப்படுத்தலும் அதற்கான யுத்தி முறைகளும் தொடர்பில் விழிப்புணர்வு கருத்தரங்கை அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி ஹபீலா அஸீஸ் தலைமையில் வளவாளராக நிந்தவூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி றிஸ்வானுல் ஜென்னா வழங்கினார்.

கண்காட்சியில் யுவதிகளால் பயிற்சிக் காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலை சீருடை வகைகள், ஆடை அணிகலன்கள் சாரிகள், சல்வார்கள், சட்டைகள், நவநாகரீக உடைகள் என பல்வேறு பொருள்கள் காட்சிப் படுத்தப் பட்டிருந்தன.



பெண் தலைமைத்துவ மற்றும் பாடசாலை கல்வியை இடைநிறுத்திய யுவதிகள் இந்தத் திட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளனர். அவர்களது வருமானத்தை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த கண்காட்சியில் உற்பத்தி பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கான வழிவகைகளை இலகுவாக மேற்கொள்ள பல்வேறு விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.



# ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியான பின்னர் காசா – உக்ரைன் போரின் நிலமை...?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

(மத்திய கிழக்கில் அமெரிக்கர்களின் ஒரே நம்பகமான கூட்டாளி இஸ்ரேல் தான். எனவே அமெரிக்கர்கள் தங்கள் நீண்டகால ஆற்றல் நலன்களைப் பாதுகாக்க இஸ்ரேலை ஒரு பாரிய இராணுவ தளமாகவும் பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியினரோ அல்லது குடியரசுக் கட்சியினரோ எவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இந்தப் புவிசார் அரசியல் உண்மை மாறாது. மேலும் உயர் மட்டத்தில் உள்ள அமெரிக்க பாதுகாப்பு அவை இதைப் புரிந்து கொண்டே புவிசார் அரசியலை வரையறை செய்கின்றனர்.)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் உக்ரைன், காசா போரின் நிலமைகள் மாற்றமடையும் என்பதே சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் நிலைப்பாடாகும்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியான பின்னர் இந்த இரண்டு போர்கள் தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம் வருமா என்ற எதிர்பார்ப்பு பாரியளவில் உள்ளது.

### இஸ்ரேல்- அமெரிக்க உறவு

இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் ஆதரவு எப்போதும் அசைக்க முடியாதது. இஸ்ரேலிய அரசியல் பரப்புரையாளர்கள் அமெரிக்க அரசின் ஒவ்வொரு மட்டத்தையும் எப்படிக் கட்டுப்படுத்து வைத்துள்ளனர் என்பதைப் பற்றிய பல தகவல்கள் அறியப்பட்டதே.

பெரும் வல்லரசுகளுக்கு மத்திய கிழக்கு எப்போதும் முக்கியமானது. உலகின் பெரும்பாலான எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்கள் அங்கு தான் அமைந்துள்ளன.

வளைகுடாவின் செல்வந்த ஆட்சியாளர்கள் தங்கள் வளங்களை அமெரிக்கர்கள் பெற மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஆதரவளிக்கின்றனர். இந்த நாடுகளை ஜனநாயக நாடுகளாக மாற்ற முடியாது.

இந்த வளைகுடா அரசுகள் நம்பகமான பங்காளிகளாக அமெரிக்கர்களுக்கு உள்ளனர். ஆயினும் சவுதி பல ஆண்டுகளாக அமெரிக்க ஆதரவாக இருந்தும், 9/11 தற்கொலை குண்டுதாரிகளில் பெரும்பாலானவர்கள் சவுதி அரேபியாவிலிருந்து வந்தவர்களாவர்.




இதனாலேயே மத்திய கிழக்கில் அமெரிக்கர்களின் ஒரே நம்பகமான கூட்டாளி இஸ்ரேல் தான். எனவே அமெரிக்கர்கள் தங்கள் நீண்டகால ஆற்றல் நலன்களைப் பாதுகாக்க இஸ்ரேலை ஒரு பாரிய இராணுவ தளமாகவும் பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியினரோ அல்லது குடியரசுக் கட்சியினரோ எவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இந்தப் புவிசார் அரசியல் உண்மை மாறாது. மேலும் உயர் மட்டத்தில் உள்ள அமெரிக்க பாதுகாப்பு அவை இதைப் புரிந்து கொண்டே புவிசார் அரசியலை வரையறை செய்கின்றனர்.

ட்ரம்ப் தனது இஸ்ரேலுக்கான ஆதரவில் அதிகளவு ஆக்ரோஷமாக இருக்க முடியும். ஆனால் கமலா ஹாரிஸ் இஸ்ரேலை எந்த வகையிலும் அச்சுறுத்த அனுமதிக்க மாட்டார் என்பதும் உண்மையாகும்.

### உக்ரைன் போரின் நிலை

உக்ரைன் போர் அமெரிக்காவிற்கு மிகவும் சிக்கலானது. உக்ரேனில் அமெரிக்காவின் நலன்கள் மிகவும் மறைமுகமானவையாக இருப்பினும் ஆனால் முக்கியமானதாகும்.

ரஷ்யாவுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடுகள் ரஷ்யாவை தொடர்ந்தும் அதிகம் அஞ்சுகின்றன. பின்லாந்து, பால்டிக் நாடுகள் மற்றும் போலந்து ஆகியவை இதில் அடங்கும்.

இந்த நாடுகள் நேட்டோவில் மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியத்திலும் உறுப்பினர்களாக உள்ளன. எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் நலன்கள் ரஷ்யாவால் நேரடியாக அச்சுறுத்தப்படுகின்றன என கருதுகின்றனர்.

அமெரிக்கா நேட்டோவின் மிக முக்கியமான உறுப்பினராகும். ஐரோப்பிய ஒன்றியம் பெரும்பாலும் அமெரிக்கர்களுடன் நட்பாக இருக்கும் ஜனநாயக நாடுகளால் ஆனது. உக்ரைனின் பெரும்பாலான பாதுகாப்புக்கு ஐரோப்பிய ஒன்றியம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதும், அது அமெரிக்காவுக்கு மட்டும் அல்ல என்பதே ட்ரம்ப் அரசின் நிலைப்பாடாகும்.

ஆனால் ரஷ்யாவை ஐரோப்பியர்கள் எதிர்த்துப் போரிடுகிறார்கள். உக்ரைன் வீழ்ந்தால், நேட்டோ நாடுகள் ஆபத்துக்கு உள்ளாகும். அப்படி நிகழ்ந்தால் மேலும் அமெரிக்காவுக்குச் செலவுகள் இன்னும் அதிகமாக இருக்கும். அப்படி நிகழ்ந்தால் ட்ரம்ப் ஐரோப்பியர்களை அதிக பணம் செலுத்துமாறு கேட்பார். ஆனால் அவர் உக்ரைனை முழுமையாக கைவிட அனுமதிக்க மாட்டார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவுடன் ஒரு இறுதி சமாதான ஒப்பந்தம் எப்படி இருக்கும் என்பதில் அவரின் நிலைப பாடு எவ்வாறு இருக்கும் என்பது தெளிவில்லை.

ரஷ்யாவின் முக்கியமான துறைமுகமான செவாஸ்டோபோல் காரணமாக கிரிமியா எப்போதும் அவசியமாகிறது. கிரிமியாவை புட்டின் ஒரு போதும் கைவிடமாட்டார். கிரிமியாவைப் பாதுகாக்க அசோவ் கடலையும் பாதுகாக்க வேண்டும். அத்துடன் ரஷ்யாவின் மேற்கில் மிகவும் பாதுகாப்பான இயற்கை எல்லை டினேப்பர் நதியாகும்.

ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனின் வரைபடத்தைப் பார்த்தால், ரஷ்யா பல்லாயிரக்கணக்கான வீரர்களை தியாகம் செய்த இடங்கள் இவை என்பதை காணலாம்.

எனவே, உக்ரைன் ரஷ்யாவின் கைப்பாவை ஆட்சியாக இல்லாவிட்டால், ரஷ்யா விரைவில் அல்லது பின்னர் இந்த இடங்களை மீண்டும் ஆக்கிரமிக்கும் என்ற ஐயமும் உள்ளது.

டினேப்பருக்கு கிழக்கே உக்ரைனின் பல பிராந்தியங்கள் தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆயினும் கிரிமியா மற்றும் அசோவ் கடல் ஆகியவை பேச்சு மூலம் தீர்க்க ரஷ்யா அனுமதிக்காது. இப்பிராந்தியங்களை உக்ரைன் – நேட்டோ இதனை மீட்டு, புடின் அதிக பதிலடி கொடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆயினும் இப்போரில் உண்மை என்னவென்றால், உக்ரைன் – நேட்டோ கொடுத்த விலையும் மிக அதிகமாக இருப்பதால், கூடிய விரைவில் பேச்சு மேசைக்கு இரு தரப்பும் வருவது நல்லது. ட்ரம்ப் இந்த விஷயங்களை விரைவுபடுத்துவார் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# இந்தி நடிகர் சல்மான் கானுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது:

## மகாராஷ்டிர பொலிஸிடம் ஒப்படைப்பு




இந்தி திரைப்பட நடிகர் சல்மான் கான் 5 கோடி ரூபா தராவிட்டால் அவரை சுட்டு கொன்றுவிடுவோம் என மிரட்டிய நபர் கர்நாடகாவில் கைது செய்யப் பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தி திரைப்பட நடிகர் சல்மான் கானின் மேலாளரை மர்ம நபர் ஒருவர் தொலை பேசியில் தொடர்பு கொண்டார். அப் போது தன்னை பிரபல தாதா லாரன்ஸ் பிஷ்னோயின் சகோதரர் என அறிமுகப் படுத்திக்கொண்ட அவர், 5 கோடி ரூபா தராவிட்டால் சல்மான் கானை, மகா ராஷ்டிர முன்னாள் அமைச்சர் பாபா சித்திக்கை போல சுட்டுக்கொன்று விடு வேன் என கொலை மிரட்டல் விடுத்தார்.

இதையடுத்து சல்மான் கான் தரப்பில் நவி மும்பை பொலிஸில் புகார் அளிக் கப்பட்டது. இதுகுறித்து வழக்கு பதிவு செய்த பொலிஸார், தொலைபேசி எண் ணைக் கொண்டு தேடுதல் வேட்டையில் இறங்கினர். இந்நிலையில், சம்பந் தப்பட்ட தொலைபேசி எண்ணை கர் நாடக மாநிலம் ஹாவேரியை சேர்ந்த பிகாராம் (வயது 33) என்பவர் பயன் படுத்தி வருவது தெரியவந்தது.

இதுதொடர்பாக நவி மும்பை பொலி ஸார் கர்நாடக பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். இதன்பேரில் பிகாராமை கர்நாடக போலிஸார் நேற்று முன்தினம் மாலை ஹுப்ளியில் கைது செய்தனர். ராஜஸ்தானை சேர்ந்த அவர் கடந்த 2 ஆண்டுகளாக அங்கு தங்கி, கூலி வேலை செய்து வருகிறார் என்பது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து, அந்த நபரை நவி மும்பை பொலிஸாரிடம் நேற்று ஒப்ப டைத்தனர். இதுகுறித்து பொலிஸார் ஒருவர் கூறும்போது,

"பிரபல தாதா லாரன்ஸ் பிஷ்னோய்க் கும் இவருக்கும் தொடர்பு இருப்பது போல தெரியவில்லை. அவரது சகோ தரர் என பொய் கூறியுள்ளார். தனது நண்பர்களிடம் சவால் விட்டு, தவறாக செல்போனில் பேசிவிட்டதாக கூறினார். இருப்பினும் பொலிஸார் அவரிடம் விசாரித்து வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

இதேவேளை, இந்தி நடிகரான ஷாருக் கானை தொலைபேசியில் நேற்று தொடர்பு கொண்ட மர்ம நபர் கொலை மிரட்டல் விடுத்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பான புகாரின் பேரில் அடையாளம் தெரியாத நபர் மீது மும்பையின் பாந்த்ரா பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. இது தொடர்பாக பொலி ஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கருணாநிதி குறித்து அவதூறு: சீமான் மீது வழக்குப்பதிவு

முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து அவதூறாக பேசியமை உள் ளிட்ட 2 பிரிவுகளின் கீழ் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது தாந்தோணிமலை பொலிஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது.

விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சாட்டை துரைமுருகன் முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து அவதூறாக பாடல் பாடினார். இதுகுறித்து திருச்சி மாவட்டத் தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான் ஒகஸ்ட் 4 ஆம் திகதி சாட்டை துரைமுருகன் பாடல் குறித்து பேசி, அதே பாடலை நானும் பாடுகிறேன். பொலிஸ் என்ன நடவ டிக்கை எடுக்கிறது என்று பார்க்கிறேன்



எனக்கூறி பாடல் பாடினார். மேலும் அவதூறான வார்த்தைகளை பயன் படுத்தினார்.

இதையடுத்து நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது மேற்படி விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கக்கோரி கரூரைச் சேர்ந்த வழக்க றிஞர் தமிழ் ராஜேந்திரன் ஒகஸ்ட் 5 ஆம் திகதி கரூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தார். ஒகஸ்ட்14 ஆம் திகதி தாந்தோணிமலை பொலிஸ் நிலையம், எஸ்.பி. அலுவலகத்திற்கு புகார் அனுப் பினார்.

இவற்றில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் கரூர் குற்ற வியல் நடுவர் நீதிமன்றம் கடந்த ஒகஸ்ட் 19 ஆம் திகதி வழக்கு தொடர்ந்தார். ஒக்டோபர் 7 ஆம் திகதி இவ்வழக்கை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன் றத்தில் இவ்வழக்கில் விசாரணைக்கு அனுமதி வழங்கி தாந்தோணிமலை பொலிஸ் நிலையம் இவ்வழக்கை விசாரித்து நடவடிக்கை எடுக்க உத்த ரவிட்டது.


இதையடுத்து நீதிமன்ற உத்தரவின் படி நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான் மீது தாந்தோ ணிமலை பொலிஸ் நிலையத்தில் நேற்று அவதூறாக பேசுதல், இழிவு படுத்தும் நோக்கத்தில் பேசி இணைய தளத்தில் வெளியிடுதல் உள்ளிட்ட இரு பிரிவுகளின் வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது.

# அமரன் படத்துக்கு எதிராக முற்றுகை போராட்டம்

இராணுவ மேஜர் முகுந்த் வரதரா ஜனின் வாழ்க்கை வரலாற்றை மைய மாக வைத்து தயாரிக்கப்பட்ட 'அமரன்' திரைப்படத்தை நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் இண்டர்நேஷனல் நிறுவ னம் தயாரித்துள்ளது.

முஸ்லிம்கள் மீதுவெறுப்பை விதைத்து, நல்லிணக்கத்தை கெடுக் கும் 'அமரன்' திரைப்படத்தை தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தி, சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள ராஜ்கமல் நிறுவனத்தை எஸ்.டி.பி.ஐ. கட்சியினர் நேற்று முற்று கையிட்டு போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து, தேனாம்பேட்டை பொலிஸார், போராட்டக்காரர் களை கைது செய்து அப்புறப்படுத் தினர்.





# அற்புதமான மனிதர் நரேந்திர மோடியை ஒட்டுமொத்த உலகமும் விரும்புகிறது

## ட்ரம்ப் புகழாரம்



இந்திய பிரதமர் நரேந்திர மோடி மிகவும் அற்புதமான மனிதர். ஒட்டுமொத்த உலகமும் அவரை விரும்புகிறது என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள டொனால்ட் ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது. குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும், ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸூம் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின. மொத்தம் உள்ள 538 வாக்காளர்கள் குழு உறுப்பினர்களில் 295 உறுப்பினர்களின் ஆதரவை பெற்று ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி இரவு பிரதமர் நரேந்திர மோடி, தொலைபேசியில் தொடர்பு கொண்டு ட்ரம்ப்புக்கு வாழ்த்து தெரிவித்தார். அப்போது, தொழில்நுட்பம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி உள்ளிட்ட துறைகளில் இணைந்து பணியாற்ற இரு தலைவர்களும் உறுதிபூண்டனர்.

இந்த நிலையில், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள ட்ரம்ப் கூறும்போது,

“இந்தியா அற்புதமான நாடு. இந்திய பிரதமர் நரேந்திர மோடி மிகவும் அற்புதமான மனிதர். ஒட்டுமொத்த உலகமும் அவரை விரும்புகிறது. அவர் எனது மிக நெருங்கிய நண்பர். ஜனாதிபதி தேர்தலில் நான் வெற்றி பெற்றதும் என்னை முதலில் தொடர்பு கொண்டு வாழ்த்திய தலைவர்களில் அவரும் ஒருவர்” என்று தெரிவித்தார்.

பிரதமர் மோடி – ட்ரம்ப் இடையிலான தொலைபேசி உரையாடல் குறித்து இந்திய மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறும்போது,

“அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் அந்த நாட்டு மக்களின் தீர்ப்பை இந்தியா கொண்டாடுகிறது. தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப்பை பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்தினார். இரு நாடுகளின் நலன்கள், உலக அமைதி, செழுமைக்காக ஒன்றிணைந்து செயல்பட மோடியும், ட்ரம்ப்பும் உறுதி மேற்கொண்டனர்” என்று தெரிவித்தார்.

# அடுத்த வருடம் அதிகார மாற்றம் இடம்பெறும் என்கிறார் ஜோ பைடன்



அடுத்த வருடம் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அமெரிக்காவில் அமைதியான முறையில் அதிகார மாற்றம் இடம்பெறும் என ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஜனநாயகம் மேலோங்கியுள்ளது என்பதை தற்போதைய தேர்தல் பெறுபேறு உறுதிப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேர்மையானதும், நீதியானதுமான தேர்தல் இடம்பெற்றுள்ளது. இந்த நிலைமை தொடர வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்பிடம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவருடன் இணைந்து பணியாற்றுமாறு தமது பணியாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்ததாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.





# மெக்சிகோவின் தெற்கு பகுதியில் வாகனத்திலிருந்து 11 உடல்கள் மீட்பு

மெக்சிகோவின் தெற்கு பகுதியில் கைவிடப்பட்ட வாகனம் ஒன்றிலிருந்து 11 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2 குழந்தைகளின் உடல்களும் அடங்குவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது கொலையாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கனடா முரசு
பக்கங்கள் 02
வெள்ளிக்கிழமை 08/11/2024

## வீட்டு உரிமையாளர்களின் தவணைக் கடன் அதிகரிப்பு

கனடாவில் வீட்டு உரிமையாளர்கள் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக வீட்டு அடமான ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் 02



# கோவில் அருகே கூடினால் கைது; கனடாவில் பொலிஸார் எச்சரிக்கை

**கனடாவில் இந்துக்கள் கோவில் தாக்கப்பட்டதை கண்டித்து கோவில் அருகே இந்துக்கள் போராட்டம் நடத்த முயற்சித்த போது, கோவில் அருகே கூடினால் கைது செய்யப்படும் என்று கனடா பொலிஸார் எச்சரித்துள்ளனர்.**

**கனடாவில் டொரன்டோ மாகாணத்தில் ஹிந்து சபை கோயில் உள்ள நிலையில், அங்கு காலிஸ்தான் ஆதரவாளர்கள் பக்தர்கள் மீது தாக்குதல் நடத்திய காணொளிகள் வெளியானது.**

இதன்போது , காலிஸ்தான் கொடி கம்பங்களை வைத்து குழந்தைகள் பெண்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்துக்கள் ஒவ்வொருவரையும் குறிவைத்து காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதால், அந்த பகுதி போர்க்களமாக மாறியுள்ளது.

சம்பவத்திற்கு இந்திய பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர் இந்த நிகழ்வுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இந்த சம்பவத்தை கண்டித்து கோயில் முன்பு இந்துக்கள் கூடி போராட்டம் நடத்திய நிலையில், அதில் ஏராளமான இந்துக்கள் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து பொலிசார் குவிக்கப்பட்ட நிலையில், சட்ட விரோதமாக கோவிலுக்குள் கூடினால் கைது செய்யப்படுவார்கள் என்றும், அனைவரும் கலைந்து செல்ல வேண்டும் என்றும் பொலிசார் கூறியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# கனடாவில் திருட்டு சம்பவம் சிறுவன் மீது குற்றச்சாட்டு



கனடாவில் நகையகம் ஒன்றை திருடினார் என 14 வயதான சிறுவன் ஒருவன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் நோர்த் யார்க்கில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஷெப்பர்ட் அவென்யூ மற்றும் டான் மில்ஸ் ரோடு பகுதியில் உள்ள கடைக்குள் முகமூடி அணிந்த மூன்று சந்தேக நபர்கள் நுழைந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நகையகத்தில் வைக்கப்பட்டிருந்த நகை காட்சி பெட்டிகளை சுத்தியலால் அடித்து நொறுக்கியுள்ளனர்.

பின்னர் சந்தேகநபர்கள் ஒரு தொகை நகைகளை எடுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் ஒருவர் அந்த இடத்தை விட்டு கால்நடையாகச் தப்பிச் சென்றுள்ளார், ஏனைய இருவரும் திருடப்பட்ட வாகனமொன்றில் தப்பிச் சென்றுள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பிரதான இரண்டு சந்தேகநபர்கள் இதுவரையில் கைது செய்யப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







# டிக்டோக் அலுவலகங்களை மூடுவதற்கு கனடா உத்தரவு

தேசிய-பாதுகாப்பு அபாயங்களை மேற்கோள் காட்டி, சீனாவுக்குச் சொந்தமான டிக்டோக் அலுவலகங்களை நாட்டில் மூடுவதற்கு கனடா உத்தரவிட்டது.

எனினும், கனேடியர்கள் குறுகிய வீடியோ செயலிக்கான அணுகல் அல்லது பதிவேற்றம் மேற்கொள்வதற்கான செயல்களுக்கு அரசாங்கம் தடை விதிக்கவில்லை.


கனடாவின் பாதுகாப்பு, உளவுத் துறை சமூகம், பிற அரசாங்க பங்காளிகளின் ஆலோசனையின் பேரில், ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஒட்டாவா கடந்த ஆண்டு கனடாவில் தனது வணிகத்தை முதலீடு செய்வதற்கும் விரிவாக்குவதற்கும் டிக்டோக்கின் திட்டத்தை மதிப்பாய்வு செய்யத் தொடங்கியது.

இதனிடையே டிக்டோக்கின் பிரதிநிதி ஒருவர், நிறுவனம் இந்த முடிவை எதிர்த்துப் போராட விரும்புவதாகக் கூறினார்.

டிக்டோக்கின் கனேடிய அலுவலகங்களை மூடுவது மற்றும் நூற்றுக்கணக்கான ஊதியம் பெறும் உள்ளூர் வேலைகளை அழிப்பது எவருக்கும் சிறந்தது அல்ல. இந்த உத்தரவுக்கு எதிராக நாங்கள் நீதிமன்றை நாடவுள்ளோம் என்று அவர் கூறினார்.






# கனடாவிற்கு புலம் பெயர்வது எப்படி? கூகுள் தேடிய அமெரிக்க பிரஜைகள்

அமெரிக்காவில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் வெற்றியீட்டியுள்ளார்.

இதனை தொடர்ந்து கனடாவிற்கு எவ்வாறு புலம் பெயர்வது என பலர் கூகுளில் தேடியுள்ளனர்.

google தேடுதளத்தில் கனடாவிற்கு புலம்பெயர்வது தொடர்பான தகவல்களை தேடியவர்கள் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்திருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக கட்சியின் வேட்பாளர் கமலா ஹரிஸ் வெற்றி ஈட்டிய மாநிலங்களான பெர்மான்ட், மெயின், நியூ ஹம்ஸ்யார், ஓர்கான், மினிசோட்டா போன்றவற்றில் இவ்வாறு அதிக அளவானவர்கள் கனடாவிற்கு புலம்பெயர்வது குறித்து தேடியுள்ளனர்.

கனடாவிற்கு புலம்பெயர்வது எவ்வாறு? கனடாவில் குடியேறுவது எவ்வாறு? கனடாவில் வாழ்வதற்கு சிறந்த இடங்கள் எவை? கனடிய விசா பெற்றுக் கொள்வது எவ்வாறு? போன்ற கேள்விகளின் வழியாக google தேடுதளத்தின் ஊடக பல அமெரிக்கர்கள் தேடல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

## வீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது அவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

கனடிய மத்திய வங்கி வட்டி விகிதங்களை குறைத்த போதிலும் வீட்டு உரிமையாளர்களினால் அடமான தவணைக் கடனை செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டு பகுதியில் அடமான தவணைக் கடன் தொகையை செலுத்த முடியாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டிலும் இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்கும் என நிதித்துறைசார் ஆய்வாளர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

